நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

பக்கங்கள்: ஆறு                Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை 05 09 1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 281

# போராளிகள் சகல கலைகளையும் கற்று சகலகலா வல்லுநர்களாக திகழ வேண்டும்

## அரங்கேற்ற விழா ஆசிச் செய்தியில் தலைவர் பிரபா வெளியிட்ட ஆவல்

யாழ்ப்பாணம், செப். 5

"எமது போராளிகள் போர்க் கலையில் மட்டுமன்றி சகல கலை நுணுக்கங்களையும் கற்று, சகல கலா வல்லவர்களாக உருவாக வேண்டும் என்பதே எனது ஆவல்"

— இவ்வாறு தனது ஆவலை வெளியிட்டார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான செல்வன் தினேஷின் (அரியநாயகம் ஸ்ரீகாந்தாவின்) மிருதங்க அரங்கேற்றம் தொடர்பாக அவருக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியிலேயே தலைவர் பிரபாகரன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

நல்லூர் இளங் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நேற்று இந்த அரங்கேற்ற நிகழ்வு இடம்பெற்றது.

கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்துக்கு கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமை வகித்தார்.

தமது வாழ்த்துச் செய்தியில் தலைவர் பிரபாகரன் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"இன்று உனது மிருதங்க அரங்கேற்றம் நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மிகவும் குறுகிய காலத்தில் இசைக்கலை பயின்று, மேடையேறும் அளவிற்கு திறமை பெற்ற உனது முயற்சியை நான் பாராட்டுகின்றேன்."

"எமது போராளிகள் போர்க்கலையில் மட்டுமன்றி, சகல கலை நுணுக்கங்களையும் கற்று சகல கலா வல்லவர்களாக உருவாக வேண்டும் என்பதே எனது ஆவல். எனது ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் நீ ஓர் இசைக் கலைஞனாக உன்னை உருவாக்கி, எமது போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளாய். இசைத்துறையில் உனது முயற்சி வெற்றிபெற எனது மனமார்ந்த ஆசிகள்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தலைவரின் இந்த ஆசிச் செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. தமிழ்ச்செல்வன் வாசித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு போதிய பலம் இல்லை:

# கடற் பிராந்திய தடைச் சட்டத்தை அரசினால் அமுல் செய்ய முடியாது

## ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, செப்டெம்பர் 5

வடக்குப் பிரதேசக் கடற்பரப்பில் வள்ளங்கள் மற்றும் படகுகள் செல்வதற்குத் தடை விதித்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்ட விதி ஒன்றைப் பிரகடனம் செய்துள்ள போதிலும் அந்த சட்டவிதியை அமுல் செய்யக்கூடிய பலம் ஸ்ரீலங்கா கடற்படைக்கு இல்லை.

இராணுவப் பகுப்பாய்வாளர்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் இவ்வாறு கருத்து வெளியிட்டன.

பி.பி.ஸி. மற்றும் ஜேர்மன் வானொலிக்கு செய்தி அஞ்சல் செய்பவரான ஐரிஸ் ராஜகருணநாயக்கா இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக் கொடி நேற்று ஏற்றப்பட்டது

# பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 5

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கும் பணி இன்று முதல் மீண்டும் வழமைபோல் மேற்கொள்ளப்பட இருக்கின்றது

இதற்கு வசதியாக நேற்றுப் பிற்பகல் 8.30 மணியளவில் துறைமுகப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கொடி ஏற்றப்பட்டது.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் "குமாரி" கப்பலும், திருகோணமலையிலிருந்து புறப்பட்டு வரும் "ருகுணு" கப்பலும் இன்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்ததும் அவற்றிலிருந்து ஒரே நேரத்தில பொருள்களை இறக்கும் பணி ஆரம்பமாகும்.

கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்படுவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று யாழ். அரச அதிபருக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் வழங்கப்பட்டது.

(உ-5-6-162)

# மட்டக்களப்பில் புலிகள் தாக்கு பொலீஸார் மூவர் உயிரிழப்பு

## ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 5

மட்டக்களப்பு மாவட்டம் கோவில்போரதீவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2-30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில், காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மூவர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தை ஸ்ரீலங்காப் படை வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

பட்டிக்குடியிருப்பு—வெல்லாவெளி பிரதான வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது கோவில் போரதீவில் உள்ள உறுகாமம் என்னுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

கொல்லப்பட்ட பொலீஸாரிடம் இருந்து ரி-56 துப்பாக்கிகள் மூன்று, அவற்றுக்குரிய மகஸின்கள் நான்கு, நடுத்தர ரவைகள் — 113, தொலைத் தொடர்பு சாதனம் ஒன்று என்பவற்றை புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-5-6)

# மன்னாரில் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், செப். 5

மன்னார் மாவட்டத்தில் கட்டையடம்பன் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12-30 மணியளவில் "புக்காரா" விமானங்கள் குண்டு வீச்சினை நடத்தின.

கட்டையடம்பன் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் அங்குள்ள காட்டுப் பகுதியில் மாறிமாறி குண்டுகளை வீசின.

பின்னர் மாலை 4 மணிக்கு மீண்டும் வந்த புக்காரா விமானங்கள் மன்னாரின் பரப்புக்கடந்தான் பகுதியில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(ஓ-5)

# பறாளைப் பகுதியை நோக்கி நேற்று ஷெல் குண்டு வீச்சு

திருவடிநிலை கடலில் இருந்து நேற்றுக் காலை 7 மணி முதல் சுழிபுரம், பறாளைப் பகுதியை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பறாளை குளத்திற்கு அருகிலும் இரு குண்டுகள் விழுந்து வெடித்தன. அப்போது வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர்.

இதேசமயம் கடற் பகுதியிலும் தொடர்ச்சியாக பீரங்கி வேட்டுக்கள் முழங்கியபடி இருந்தன.

(ஓ-28-15)

# தீர்வு குறித்து தொண்டா டி.பி., ரணிலுடன் பேச்சு

## இவ்வாரத்தில் சந்திப்பு

கொழும்பு, செப் 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் தாம் இவ்வாரத்தில் சந்தித்துப் பேசவிருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இதனை வெளியிட்டது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, அரசுடன் பேச்சு நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வலி. மேற்குப் பகுதிகளில் ஹெலி பரவலாக நோட்டம்

## மாலை பலத்த ஷெல் தாக்குதல்

சுழிபுரம், செப். 5

வலிகாமம் மேற்குப் பகுதிகளை நேற்றுப் பகல் 11 மணியளவில் ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது. சுமார் அரைமணி நேரம் ஹெலி வட்டமிட்ட படி இருந்தது.

சுழிபுரம், பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, தொல்புரம், மூளாய், பொன்னாலை, அராலி, சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிகளுக்கு மேலாகவே ஹெலி பறந்தது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவலாக ஹெலி நோட்டம் இடம்பெற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வது)

கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்

# வெற்றிடம்

**பதவி: பொது முகாமையாளர் 165/88 — 8**

வேதனம்:

1305 — 60 X 4 — 75 X 11 — 2370 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வி மற்றும் தகைமைகள்:

அ. கூ. ச. ஊ. 9ஆம் சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 10ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை/மேற்பார்வை மட்டப்பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தர) சான்றிதழ் 3 பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**பதவி: கணக்காளர் 165/88 — 10**

வேதனம்:

1005 — 40 X 5 — 50 X 10 — 1705 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள்:

அ. கூ. ச. ஊ. 11ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ 12ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. பட்டையம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமைக்கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி சட்டம்/அல்லது இலங்கை தொழில் நுட்பக்கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவவமொன்றில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவி ஒன்றில் நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பதவி: பால் நிலைய முகாமையாளர் 165/88 — 12**

வேதனம்:

855 — 30 X 7 — 40 X 8 — 1385 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:

(அ) கூ. ச. ஊ. 13 ஆம் சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 14 ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவு பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / க. பொ. த. உயர்தர) சான்றிதழ் மூன்று பாடங்களுடன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில் நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

பொது:

வயது எல்லை:

வயது 23க்கும் 50க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

வசிப்பிடத் தகைமை:

குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ், மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பிணைப் பணம்:

கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை:

கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதி:

**20 — 09 — 1993**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

- தலைவர்.

(சி-5881)

---

# A/L DAY CLASSES

ஆரம்பம்:- 07—09—1993 (8 மணி)

செவ்., வியா., சனி, ஞாயிறு

பொருளியல் — மகேந்திரன்
கணக்கியல் — SAM
வர்த்தகம் — பசில்
அளவையியல் — சோதி
அரசியல் — கியூபேட்
புவியியல் — சண்
தமிழ் — குழந்தை
இந்து நாகரிகம் } அருள்-
இந்துசமயம் } நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி/6044)

---

# BECON

STANLEY ROAD, JAFFNA.

விலங்கியல்

மீட்டல் வினா - விடை வகுப்பு

பிரிவு: III

வியாழன் 3 - 6 p. m.

ஆசிரியர்: திரு. கெங்காதரன்

ஆரம்பம்: 09 — 09 — 1993

வியாழன் 3 p m

[சி/6041]

---

# புதிய ஆங்கில கல்வி நிலையம்

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH

By: R SIVALINGAM (Dip. in - English)

புதிய பிரிவு - 2 (04-09-1993) காலை 8-00 மணி

புதிய பிரிவு - 3 (05-09-1993) காலை 8-00 மணி

(சி-6037)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பொதுப் பட்டமளிப்பு விழா 1993-09-11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா 93-09-11 ஆம் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கு 93 09-08 தொடக்கம் 93-09-10ஆம் திகதி வரை, காலை 9-30 — 12-00 வரையும், பிற்பகல் 1-30 — 3-30 மணிவரைக்கும் பட்டமளிப்பு விழா அங்கிகள் வழங்கப்படும்.

அங்கிகளைப் பெற வரும் பட்டதாரிகள் புகைப்படத்திற்கான ரூபா 80/- ஐ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டையும், தமது பல்கலைக்கழக அடையாள அட்டையையும் கல்விக் கிளையில் சமர்ப்பித்து அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

---

# பெண் ஆசிரியர்கள் தேவை

1. தையல்,
2. மனையியல்

ஆகிய இரு பாடங்களுக்கும் பெண் ஆசிரியர்கள் தேவை

காலம்: 08-09-1993 புதன்கிழமை பிற்பகல் 1. 30 மணி.

இடம்: திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலை

நேர்முகத் தேர்வு:- உங்களது சகல சான்றிதழ்கள், அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிக்கப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும். (27194)

---

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி

# கல்விக் கண்காட்சி

இன்று 5-9-93 தொடக்கம் 8 9 93 வரை உள்ள நாட்களில் பிற பாடசாலை மாணவர்கள், பெற்றோர், ஆர்வலர்கள் ஆகியோர் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

திருமதி தி. நாகராசா. அதிபர்

(சி/5882)

---

## ஆண்டு — 4 [புலமைப்பரிசில் 1994]

பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

- தற்பொழுது ஆண்டு — 4 படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்காக விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட
- வாராந்த ஊக்குவிப்பு பயிற்சிகள்
- மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

புதிய பிரிவு ஆரம்பம்:- **05-09-1993**

# BOND கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(27196)

---

# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

## THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

வருடம் 4 - 10, G. C. E. O/L, A/L

Spoken English Short - Hand Typing

ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: **06 - 09 - 1993**

(6462)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

# 93 O/L

சனி, ஞாயிறு, பகல், மாலை நேர வகுப்புகளுக்கான

# PAPER CLASS

(வினா-விடை வகுப்புக்கள்)

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு. J R. சூரி |
| கணிதம் | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | திரு. கோபி |
| ஆங்கிலம் | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | திரு. சிவா, திருப்பதி |
| வர்த்தகம் | திரு. கருணாகரன் |
| இந்துசமயம் | திரு. கெங்கா, சங்கர் |

ஆரம்பம்: **11 — 09 — 1993**

சனி காலை 9மணி

- ஆண்டு - 9, 10, 11 பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக மீட்கப்படும்.
- விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.

(சி-6039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# தெற்கில் அரசியல் தலைமைத்துவ வரட்சி; அதனால் வடக்கின் மீது ராணுவப் பாய்ச்சல்

*கடமா தொலைச்சிய கானுறை வேங்கை யிடம் வீழ்ந்த தண்ணா திறக்கு - மிடறுடைய வானகமே கையுறினும் வேண்டார் விழுமியோர் மான மழுங்க வரின்.*

பிறந்த இடத்தையுடைய சொர்க்கம், முயற்சி இல்லாமல் கிடைப்பதாயினும், தமது மானம் கெடும்படி கிடைப்பதாயின், சிறந்த மனிதர்கள் அதனை விரும்பமாட்டார்கள் என்பதை நாலடியார் இப்படிச் சொல்கிறது.

அதற்கு உவமானமாகக் காட்டப்பட்டிருப்பது வேங்கை—வீரம் உள்ள புலி. யானையை வெற்றி கொண்டாலும், தன்னால் அறை புண்ட யானை தனது இடது புறத்தே விழுந்தால் அதனை உண்ண விரும்பாமல் சென்றுவிடுமாம் புலி. அத்தகு மானம் நிறைந்தது புலி. மானம் ஒன்றே உயிர் என வாழ்வது வீரப்புலி.

இந்த அரிய கருத்தை, யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக சிங்கள அரசாங்கத்தினர் தமிழர்களை— விடுதலைப் புலிகளை— பலவீனமாக்கி விட்டு தாம் நினைத்த ஒரு தீர்வை அவர்கள் மீது திணிப்பதற்கு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக முயற்சித்து வருகின்றனர்!

சிங்கள - பௌத்த பேரினவாதமும், அதன் பிரதிநிதியாகிய ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வு அதற்கு வகை செய்வதாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் அசையா விருப்பம்.

சமஷ்டி அரசமைப்பின் கீழ் தமிழர்களுக்கு மாநில சுயாட்சி அதிகாரம் வழங்கக் கூடிய ஒரு குறைந்த பட்ச தீர்வையேனும் சிங்களத் தலைமைத்துவம் முன் வைக்காமல் இருப்பதற்குப் பிரதான காரணம், தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக

## இனப் பிரச்சினைக்கு அடுத்த வருடம் தீர்வு என்பதன் அர்த்தம் அதுவேதான்!!

வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கமே ஆகும்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ. நா. சபை போன்ற வெளியார் - மூன்றாமவர் - உதவுவதை அரசு நிராகரித்து வருவதற்கும் அதுவே காரணம். பிரச்சினையை பக்கச் சார்பில்லாமல், நீதியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்று விரும்பும் நியாய சிந்தை உள்ள எவரும், சமஷ்டி அரசமைப்பையும் தமிழர்களுக்கு மாநில தன்னாட்சி உரிமையையுமே ஆகக் குறைந்த பட்ச ஆரம்பத் தீர்வாகக் கருதுவார்கள்.

உலகளாவிய ஒத்துழைப்புக்கான இயக்கத்தின் சார்பில் நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்களும் சமர்ப்பித்த சமாதான யோசனையில் சமஷ்டி அரசமைப்பும், மாநில சுயாட்சியும் வலியுறுத்தப்பட்டிருந்தது அதனாலேயாகும்.

தமிழர்கள் தாங்கள் பிறந்த மண்ணில் மானமுள்ள மக்களாக, கௌரவமுள்ள மக்களாக, முதலாம் தரப் பிரஜைகளாக வாழ்வதற்கு வசதி செய்யக் கூடிய ஆகக் குறைந்த தீர்வும் அதுவே. தமிழர்களின் மிக அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு ஓரளவுக்கேனும் உதவக் கூடியதும் அதுவே.

சமஷ்டி என்றால் அசுத்தமான வார்த்தை என்றும், தமிழர் தாயகக் கோட்பாடு— வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலக் கோரிக்கை — ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் சிங்கள அரசு விடாப்பிடியாக நிற்பதெல்லாம் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக அடக்கி ஆளும் நோக்குடனேயாகும். அதனாலேயே ஒற்றையாட்சி முறை என்றும் அதிகாரப் பரவல் என்றும் ஓதி வருகிறது.

### அரசின் மூலத் திட்டம்

தமிழர்களை இரண்டாந் தரப் பிரஜைகளாக வைத்திருக்கக்கூடிய தீர்வைத் திணிப்பதற்குத் தமிழர்களை இராணுவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பலவீனமாக்க வேண்டும் என்பதே அரசின் மூலத்திட்டம். அந்தத் திட்டத்தை பல்வேறு வடிவங்களில் அது செயற்படுத்தியும், பரீட்சித்தும் பார்க்கிறது. ஆனால் வெற்றிதான் கிடைப்பதாயில்லை.

கடந்த மூன்று வருடங்களாக, தமிழர்களை இராணுவ ரீதியாகப் பலவீனமடையச் செய்யும் முயற்சியில் அது வெற்றிபெற முடியவில்லை. தனது முழுச் சக்தியையும், எல்லா வளங்களையும் ஒன்று திரட்டிப் பயன்படுத்தியபோதிலும், மண்டைதீவு, மணலாறு, கடற்படை படகுகள் கவிழ்ப்பு என்



பன போன்ற மிகப் பெரும் தோல்விகளை அது சந்திக்க வேண்டிய நிலையே தொடர்கிறது. எனினும் போரைக் கைவிடும் எண்ணம் இன்னும் அரசுக்கு வரவில்லையே!

வழமை போலவே விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் முயற்சியைத் தொடர முடிவு செய்திருக்கிறது. வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் ஆறு மாத காலத்திற்குத் தொடர்ச்சியாக புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது.

இராணுவத்துக்குத் தோல்வி ஏற்படும் வேளையெல்லாம் முன்னர் மூன்று மாதங்களில் புலிகளை ஒழித்துவிடப் போவதாகக் (அது போதும் என்று கருதி) கூறிய இராணுவம் இப்போது, அரசிடம் ஆறு மாத கால அவகாசம் கேட்டிருக்கிறது.

யதார்த்தத்தை உணராமல் இராணுவம் கேட்கும் எதையுமே இல்லை என்று சொல்லாமல், வழங்குவதும் அங்கீகரிப்பதுமே அரசின் வழக்கம். ஜனாதிபதி— நாடாளுமன்ற அரசுக்குச் சமாந்தரமாக இராணுவம் ஓர் ஆட்சியை

— உதயகாந்தன் —

நடத்தி வருவதால் அது கேட்பதை நிராகரிக்கவோ, இல்லை என்று சொல்வதற்கோ அரசுக்கு எப்படித் திராணி வரும்?

"தெற்கில் உள்ள தலைவர்களிலும், முடிவெடுக்கும் பல்வேறு வகைப்பட்ட அதிகாரிகளிலும் பார்க்க இராணுவ அதிகாரிகளே இனப் பிரச்சினை குறித்து அதிகம் அறிந்திருப்பவர்களாகவும், உணர்ச்சி பூர்வமானவர்களாகவும் இருக்கின்றனர்"— என்று வண. பிதா துலீப் டி. சிக்கேரா தனது சமாதான முயற்சிகள் பற்றி எழுதலையில் தெரிவித்திருக்கிறார். (குறோஸ் லைற் 8:1)

வடக்கு-கிழக்குக்கு சமாதானத்தை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டு 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணம் வந்த மதத்தலைவர்

(5 ஆம் பக்கம் பார்க்க)



# சாதாத்தின் வழியில் சென்று இஸ்ரேலுடன் தனித்து ஒப்பந்தம் செய்ய முயலும் அரபாத்

## மத்திய கிழக்கில் 45 வருட கால நெருக்கடி நிலை முற்றுப் பெறுமா?

ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் காஸாவிலும் (Gaza-strip) பலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கும் திட்டம் ஒன்று குறித்த அறிவிப்பு இவ்வாரம் வெளியாகி இருப்பதை அடுத்து, சர்வதேச நாடுகளின் கவனம் பொஸ்னியாவிலும், சோமாலியாவிலும் இருந்து விடுபட்டு மத்திய கிழக்கு நோக்கித் திரும்பி இருக்கிறது.

### ஒஸ்லோவில் இரகசியப் பேச்சு

இஸ்ரேல் — பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் கடந்த ஏழு மாதங்களாக நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் ரகசியமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தி வந்தனர்

பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பான இடைக்கால ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான இணக்கம் ஒன்றுக்கு அவர்கள் தற்போது வந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வேயின் விடுதிகளிலும், ஹோட்டல்களிலும் வீடுகளிலும் இந்தச் சந்திப்புக்கள் உத்தியோக பூர்வமற்ற முறையில் நடைபெற்றிருந்தன.

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸ் இஸ்ரேல் சார்பாகவும் — பலஸ்தீன விடுதலை இயக்க



(P. L. O ) தலைவர் யாஸிர் அரபாத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உயர் அதிகாரியான மொஹமட் அப்பாஸ் எனப்படும் அபு மேசன் பலஸ்தீன விடுதலை இயக்கம் சார்பாகவும் — இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

மொத்தம் 14 தடவைகள் இவர்கள் ஒஸ்லோ நகரில் இரகசியமாகச் சந்தித்து பேச்சு நடத்தி உள்ளனர்.

### அரபு உலகில் பரபரப்பு நிலை

நோர்வேயில் நடைபெற்ற ரகசியப் பேச்சு, ஒப்பந்தம் ஒன்றில் கைெயழுத்திட இஸ்ரேலும், பலஸ்தீன விடுதலை இயக்கமும் நெருங்கி வந்திருப்பது மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது

பலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்கள் இதற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

யாஸீர் அரபாத் அவசரமாகச் செயற்பட்டு இஸ்ரேலுக்கு அளவுக்கு அதிகமாக விட்டுக் கொடுத்து விட்டார் என்ற கருத்தே அரபு உலகில் மேலோங்கி நிற்கிறது.

தற்போது வாஷிங்டனில் அமெரிக்க — ரஷ்ய ஆதரவுடன் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக உத்தியோக பூர்வப் பேச்சுக்களை இஸ்ரேலுடன் நடத்திவரும் ஜோர்தான், சிரியா, லெபனான் ஆகிய நாடுகளும் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

நோர்வே சந்திப்புகள், அதில் பேசித் தீர்க்கப்பட்ட விடயங்கள் குறித்து பலஸ்தீன விடுதலை இயக்கம் தம்முடன் கலந்தாலோசிக்கவில்லை என்று இந்த நாடுகள் தெரிவிக்கின்றன.

### வாஷிங்டன் பேச்சுக்கள்

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான வாஷிங்டன் பேச்சுக்கள் கடந்த 21 மாதங்களாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் பேச்சுக்கள் முன்னேற்றம் எதுவுமின்றி முடங்கிப்போய் இருந்த வேளையிலேயே இஸ்ரேல்— பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் நோர்வேயில் இரகசியமாகச் சந்திப்புக்களை நடத்தி தற்போது ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் நிலைக்கு வந்துள்ளனர்

நோர்வேயில் நடந்த இரகசியப் பேச்சுக்களின் விளைவாக கடந்த மாதம் 20 ஆம் திகதி அறிக்கை ஒன்றின் முதல் படிவம் தயாரானது.

— சஞ்சாரன் —

இதன்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு மாத காலத்துக்குள் ஜெரிக்கோவில் இருந்தும் காஸாவில் இருந்தும் இஸ்ரேல் தனது துருப்புக்களை விலக்கிக்கொள்ளும்.

9 மாத காலத்தில் தேர்தல் நடத்தப்பட்டு பலஸ்தீனர்களிடம் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

கல்வி, சுகாதாரம், சமூக நலன், உள்ளூர் பொலிஸ் ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டுமே இந்த ஆட்சிமன்றம் கொண்டிருக்கும். வெளிப்பாதுகாப்பு, இஸ்ரேல் குடியிருப்புகள், வெளிவிவகாரம் ஆகியவை இஸ்ரேலிடமே தொடர்ந்து இருக்கும்.

ஜெருசலத்தின் எதிர்கால அந்தஸ்து குறித்து இந்தப் பேச்சுக்களில் எதுவித உடன்பாடும் எட்டப்படவில்லை. [illegible] ஜோர்தானின் மேற்குக் கரையையும், [illegible] பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் குடியேற்றங்கள் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 1967 யுத்தம்

1967 ஜூன் மாதம் மத்திய கிழக்கில் நடைபெற்ற 6 நாள் யுத்தத்தில் ஜெரிக்கோ உள்ளடங்கிய மேற்குக்கரையை ஜோர்தான் இஸ்ரேலிடம் இழந்திருந்தது.

இதே யுத்தத்திலேயே சிரியா தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கோலன் குன்றுகளையும், எகிப்து சினாய் பாலைவனத்தையும் காஸாவையும் இஸ்ரேலிடம் இழந்திருந்தன.

1979 ஆம் ஆண்டு அமெரிக்காவின் காம்ப்டேவிட் நகரில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் மூலம் சினாய் பாலைவனத்தை எகிப்திடம் இஸ்ரேல் திருப்பிக் கையளித்து விட்டது.

தற்போது சிரியாவும் ஜோர்தானுமே இஸ்ரேலிடம் பறிகொடுத்த தமது பிரதேசங்களை இதுவரை மீட்கமுடியாத நிலையில் இருந்து வருகின்றன. இஸ்ரேலுடன் நேரடி எல்லையைக் கொண்ட மற்றொரு நாடான லெபனானின் தென்பகுதிகளிலும் இஸ்ரேல் படைகள் நிலைகொண்டிருப்பதால் லெபனானும் இஸ்ரேலுடன் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.

### 1979இல் வீழ்ச்சி ஆரம்பம்

1979 ஆம் ஆண்டு சாதாத்— பெகின்— கார்ட்டர் ஆகியோருக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட காம்ப்டேவிட் ஒப்பந்தத்துடனேயே பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது எனலாம்

காம்ப்டேவிட் ஒப்பந்தத்துக்கு முன்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு எகிப்தே பெருமளவு நிதியை வழங்கி வந்தது.

அந்தப் பெரும் தொகையை பலஸ்தீன விடுதலை இயக்கம் இழந்து ஏனைய அரபு நாடுகளில் தங்கியிருக்கவேண்டிய நிலையை காம்ப்டேவிட் ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தது.

கடைசியாக நடைபெற்ற வளைகுடா யுத்தம் அரபாத்தின் அரசியல் மதிப்புக்குத் மற்றொரு சவாலாகும்

இந்த யுத்தத்தின் பெரும் பாலும் முழு உலகமுமே ஈராக்கின் சதாம் ஹுசேன் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பியபோது யாஸீர் அரபாத் சதாம் ஹுசேனை ஆதரித்தார்.

இதன் காரணமாக சவூதி அரேபியா போன்ற செல்வந்த அரபு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் அவர் பகைக்க நேரிட்டது. அதுடன் எஞ்சிய அரபு நாடு



களின் நிதி உதவிகளையும் பலஸ்தீன விடுதலை இயக்கம் இழந்தது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆரம்பத்தில் ஜோர்தானைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்தது. 1970 ஆம் ஆண்டு ஜோர்தானுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதை அடுத்து பலஸ்தீன விடுதலை இயக்கம் தனது தலைமையகத்தை லெபனானுக்கு மாற்றிக் கொண்டது.

1982 ஆம் ஆண்டு லெபனானுக்குள் ஊடுருவல் நடத்திய இஸ்ரேல் படைகளின் முற்றுகையின் போது பலஸ்தீன விடுதலை இயக்கம் லெபனானில் இருந்தும் வெளியேற்றப்பட்டது. கடைசியாக இஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Second Hand Studio Light விற்பனைக்குண்டு. தொடர்பு கலசி புகைப்பட சேவை, 337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஸி-6032)

ஒரு மாதத்திற்கு மேற் பட்ட பல இன கோழிகள், முட்டை இடும் தாராக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. கந்தசாமி அன் சன்ஸ் இல: 15 ஆடியபாதம் வீதி, நல்லூர். (27174)

புதிய மொடல் இரும்பு அலுமாரி (Steel Cupboard) இரு லாச்சிகளுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. திலேஸ் இல. 38, தேவாலய வீதி, (Chapel Street) யாழ்ப்பாணம். (6463)

### மணப்பெண்கள் தேவை

U. S. A. 38 வயது, அசிட்டம், சிவில் என்ஜினியருக்கும், ஜேர்மனி 35 வயது, மூலம் மணமகனுக்கும் U.K. 38 பூசம், Ph D. க்கும், பிரான்ஸ் 37 வயது, கத்தோலிக்க மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27190)

### O/L MATHS

G. C. E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரால் 40 மணித்தியாலத்தில் Distinction பெறுபேறுடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (6461)

### ஆண்டு - 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4ற்கு (புலமைப் பரிசில் 1994) பத்தாவது தொடர் பரீட்சை 5-9-93 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 11-00 நேரங்களில் நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27173)

### இலவச திருமண சேவை

31 வயது பூஷம், சுவிஸ் மணமகனுக்கும், 29 வயது உத்தராடம், B A. சுவிஸ் மணப்பெண்ணுக்கும் ஏற்ற மணமக்கள் தேவை திருமணம் இலங்கை / சுவிஸில் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27148)

### சோதிடம்

வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கு அவ் அவ் தேச சூரிய உதய, இராசிப் பிரமாணங்களுக்கு அமைய தேசாந்திர சமஸ்கார கணிதம் செய்த ஜாதகக் குறிப்புகளை பலன்களுடன் எழுதிக்கொள்வதற்கு T V பாலா சோதிட நிலையம் புத்தகசாலை, செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக கே. கே. எஸ். றோட், இணுவில் (27192)

# PERSONAL NEW SCIENCE CENTRE

JAFFNA.

## 94 A/L

மீட்டல் வினா-விடை

04-09-1993 சனி ஆரம்பமாகிவிட்டன.

PHYSICS:
7 8 a.m.
திரு. ரவீந்திரநாதன்
B. Sc. (Cey) Dip. in-Ed

CHEMISTRY:
8—9 a m.
திரு. செல்வா
B. Sc. (Hon.)

MATHS:
திரு குணசிங்கம்
12-30p m to 14 30p.m.
B. Sc. (Hon.)

(ஸி-5874)

### வியாழமாற்றம் நன்மையா

12 - 10 - 1993இல் நிகழும் வியாழ மாற்றம் நன்மை பயக்குமா? உகை — இலங்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம். 10/- மட்டுமே. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (27180)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-00—10-30 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27169)

### வீட்டுத்தளபாடங்கள்

நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் "அற்புதம் லொட்ஜ்" கந்தரோடை (சித்து) வீதி, உடுவில் அல்லது இல. 12, மவுண்ட் கார்மல் றோட், யாழ்ப்பாணம். (27188)

# MATHS CENTRE

## A/L 94 மீட்டல் வகுப்பு

தூய / பிரயோக ] கணிதம் திரு. அருளானந்தம்

ஆரம்பம்: 05 - 09 - 93 ஞாயிறு
10. 00 a. m.

★ Physics, Chemistry நேர அட்டவணை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(6458)

# TACEP - 93 இறுதித் தேர்வு


நாள்: 12 — 9 — 1993 ஞாயிறு
நேரம்: பி. ப. 2 மணி
இடம்: பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

சோ. பத்மநாதன்,
மாநில இணைப்பாளர்.

(27176)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 30 — 05 — 1922



ஆண்டவன் அடியில்: 15 — 09 — 1992

## அமரர் நரசிங்கர் கனகசபை

(புங்குடுதீவு 5 ஆம் வட்டாரம்)

திதி: 05-09-1993

விதிவரைந்த சித்திரத்தால் விலக்கப்பட்டீர்களே ஐயா!
எவருக்கும் கிடைக்காத தந்தையாய்
ஏழேழு ஜென்மத்திலும் எட்டாதவராய்
எங்கள் மீது பாசமழை பொழிந்தீரே
நீங்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எங்கள் இதயத்தடாகத்தில்
அன்றலர்ந்த மலர்போல் பூத்திருக்கும்.

உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தி அடைவதாக.

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

135/3, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (27181)

### மணமக்கள் தேவை

ஆண் ஜேர்மனி 34 வயது, பூரம் (கிரகபாவம் 0) சகோதரி 27 வயது, 1இல் செவ்வாய், பூசம் (கிரகபாவம் 60) தேவையான மணமக்களுக்கு சந்திப்பு! ஞாயிறு காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27189)

### மகாதேவா ஜோதிடம்

04 - 10 - 1993 இல் வியாழ மாற்றம் - இதழ் பல புதிய விஷயங்களுடன் வெளிவந்து விற்பனையாகின்றது. சோதிட ஆலோசனைக்கு இல: 239, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். காலை 9.00 — 1.00 மணிவரையும் பின்பு வீட்டிலும் சந்திக்கலாம். (27171)

### தவறிவிட்டது

பொன்னையா சதானந்தம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய அட்டை (609850) இலங்கை வங்கி சேமிப்பு புத்தகம், சிறு தொகைப் பணம் ஆகியன யாழ். நவீனசந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி. வேலாயுதம், 190, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (6459)

## சாதாத்தின்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரேலுடன் எல்லையைக் கொண்டிராத டூனிஸில் தனது தலைமையகத்தை நிறுவ வேண்டிய பரிதாப நிலை அதற்கு ஏற்பட்டது டூனிஸிலேயே அது தற்போதும் செயற்பட்டு வருகிறது.

### பலஸ்தீனம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது பலஸ்தீனம் பிரிட்டனின் கீழ் இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து லட்சக் கணக்கான யூதர்கள் படிப்படியாக பலஸ்தீனத்தில் குடியேற்றப்பட்டனர். 1948 ஆம் ஆண்டில் பலஸ்தீனம் இஸ்ரேலாக மாறி அங்கு யூதர்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. பலஸ்தீன மக்கள் பீதியால் அங்கிருந்து வெளியேறி அண்டை அரபு நாடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

மீண்டும் பலஸ்தீன நாட்டை ஸ்தாபிக்கவும் இஸ்ரேலை அழிக்கவும் 1948 இலும் 1967 இலும் 1973 இலும் மூன்று யுத்தங்கள் நடத்தப்பட்டு விட்டன. லட்சக் கணக்கானோர் இந்த யுத்தங்களில் உயிரிழந்து விட்டனர். இஸ்ரேலை அழிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தங்களில் இஸ்ரேல் தன்னைப் போல் பல மடங்கு விஸ்தீரணமுள்ள பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது.

1967 யுத்தத்தில் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட ஒரு பகுதியிலேயே தற்போது பலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை — அதுவும் மிகவும் சொற்ப அதிகாரங்கள் கொண்ட உரிமை வழங்கப்பட இருப்பது பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குப் பெரும் தோல்வி என்றே கருதப்படுகிறது.

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட உள்ள இந்த ஒப்பந்தத்துக்கு சிரியாவின் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் தற்போது அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

சிரியாவின் எதிர்ப்புக்கு மத்தியில் இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஒப்பந்தம் செய்யுமானால் பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அரபாத்துக்கு எதிராக இயங்கும் தீவிரவாதக் குழுக்களுக்கு சிரியா உதவி செய்யலாம் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

மத்திய கிழக்கில் மற்றொரு சர்ச்சைக்குரிய நபரான ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹூசேனின் முதுகெலும்பு வளைகுடாப் போர் மூலம் முறிக்கப்பட்டு விட்டதால், இஸ்ரேலுடன் நேரடி எல்லையைக் கொண்டுள்ள சிரியாவின் அதிபர் ஹபீஸ் அல் அஸாத்தை சமாதானப்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது.

1967 யுத்தத்தில் இஸ்ரேலிடம் இழந்த பகுதிகளை மீளப் பெறுவது, பலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை உள்ள அரசு ஒன்றை ஏற்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான ஒப்பந்தம் ஒன்றுக்கான குறிக்கோளுடனேயே சிரியாவும், ஜோர்தானும் லெபனானும் தற்போது வாஷிங்டன் பேச்சுக்களில் பங்கு பற்றி வருகின்றன.

பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுடன் தனியாகப் பேச்சு நடத்தி தனது பிரச்சினையைத் தனித்துத் தீர்க்க முயல்வது அரபு உலக ஒற்றுமைக்கு மற்றும் ஒரு வேட்டாகும். ★

# அச்சு இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இங்கிலாந்து தயாரிப்பு (Oreley) Single Demy Cylinder Machine விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு:
திருக்கணிதம், — சாவகச்சேரி.
(27179)

## உடுவில் மகளிர் கல்லூரி

# பட்டப்படிப்புகள் பிரிவு

## G.A.Q., B.A. (Part I)


விரிவுரைகள்

ஆரம்பம்: 08 - 09 - 1993
புதன் 3 மணி

குறிப்பு:
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகிறது.
(ஸி-5877)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 20 — 08 — 1918



இறப்பு: 08 — 09 — 1990

அமரர்

## வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணன்

(தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை)

ஐயா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

தங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

572/9, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (6460)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

## உதயன்

### நூல் வெளியீடு

இல்லை என்று சொல்வதற்கு இல்லாமல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆக்க இலக்கிய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அச்சுத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் காகிதம், மை உட்பட்ட உபகரணங்கள் யாவும் தடை செய்யப்பட்ட பொருள்களாகி விட்டன 1991 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் வடபகுதிக்கு கொண்டுவரக் கூடாதெனத் தடை செய்யப்பட்ட பொருள்களில் அச்சுப் பொருள்களும் அடங்கும்.

எனினும் வடக்கில் பத்திரிகைகள், நூல்கள் வெளிவரவே செய்கின்றன. நூல் வெளியீடுகளைப் பொறுத்தவரையில் 1992 முற்பகுதி வரை மந்த நிலை நிலவியது. ஆனால் இப்போது நிலைமை எவ்வளவோ முன்னேறிவிட்டது சாதாரண காலத்தைவிட அச்சுப்பதிவு ஆகு செலவு பத்து மடங்காகியுள்ளது. அதனால் இப்போது வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகளின் விலைகள் மிகவும் உயர்ந்துள்ளன. இதனைத் தவிர்ப்பது இயலாததாகி விட்டது.

ஏனைய பல துறைகளிலும் தமிழர்களைப் பின்னடையச் செய்யும் நோக்குடன் கருமமாற்றி வரும் அரசு, அறிவுத் துறையிலும் பாதிப்பை உண்டாக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது. நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் வடபகுதி மக்களின் அறிவு வளர்ச்சியை — கல்வி முன்னேற்றத்தை — மழுங்கடிப்பதற்காகப் பல தடைகளையும் நெருக்கடிகளையும் போட்டு வருகிறது.

எனினும் அரசின் அந்த கயமைத் தனத்தை இனங்கண்டு கொண்டு, அந்தப் பாதிப்புகளில் இருந்து தப்புவதற்கான, பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் தமிழர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் கொடுமைத் தனத்துக்குச் சவால் விடுவதுபோல தமிழ்மக்கள் மாற்றுவழிகளைக் கையாண்டும், புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தியும் எதிர்நீச்சல் அடித்து வருகிறார்கள்.

கல்வித்துறை முன்னேற்றத்துக்கு — அறிவுத்துறை மேம்பாட்டுக்கு நூல் வெளியீடு இன்றியமையாதது. மாணவர்களுக்கான பாடநூல்கள், உபநூல்கள், பயிற்சி நூல்கள் என்பன அவற்றில் பிரதானமானவை. அவற்றைவிட ஆராய்ச்சி நூல்கள், சமகால வரலாற்றுப்பதிவு நூல்கள், பொருளியல், சமூக, சமய வளர்ச்சிகளுக்கு உதவும் நூல்கள் என்பனவும் தேவைப்படுகின்றன.

இவற்றோடு ஆக்க இலக்கியங்களும் நூலுருப்பெற வேண்டும். மிகக் குறிப்பாக எமது மண்ணில் இன்று இடம்பெறும் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் ஆக்க இலக்கியங்கள் தேவைப்படுகின்றன. தமிழரின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்கு ஊக்கமளிக்கும் விதத்திலும், விழிப்புணர்ச்சியைத் தூண்டும் விதத்திலும் ஆக்க இலக்கியங்கள் அமைவதே சிறப்பு. இன்றைய சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டும் படைப்புகள் தோன்றினால் மட்டுமே வருங்கால சமுதாயத்துக்கு இன்றைய வரலாற்றை அறிமுகப்படுத்த முடியும்.

இலக்கியத்துக்கு ஒரு பொது நோக்கு இருக்க வேண்டும். படைப்புகள் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும். என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் இலக்கியம் மக்களின் இன்றைய வாழ்க்கையை, அவலங்களைப் பிரதிபலிக்க வேண்டும். அத்தோடு இன்றைய கஷ்டங்களை எதிர்கொண்டு அவற்றில் இருந்து விடுபடுவதற்கான வழிகாட்டுதல்களும் ஆக்க இலக்கியங்களில் இடம்பெறுதல் முக்கிய தேவை. அப்போதுதான் அவை மக்கள் இலக்கியங்களாக மலர்ந்து மதிப்புப்பெறும். காலத்தால் அழியாமல் நிலைத்திருக்கும்.

### சுதந்திர பறவைகள் நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், செப். 5

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" செப்டெம்பர் மாத இதழ் நாளை திங்கள் வெளிவரவுள்ளது. (த)

# தமிழர் வரலாறு படைக்க பயன் உண்டு

# அரசு பணியும் காலம் நெருங்குகிறது

## இருபக்க அழிவுகள் தொடரும் நவ. 5க்கு பின் நன்மை தரும்

கிரகங்களின் அசைவே சோதிடத்தின் அடிப்படையாகும். இதுவே கால நேர கணிப்பின் அடிப்படையுமாகும். இவற்றை வைத்தே இந்துக் கோயில்களின் உற்சவங்கள், இந்துமதச்சடங்குகள் நிகழ்த்தப்படுவன.

வேதத்தின் ஓர் அங்கம் சோதிடம். வேத புருஷனின் நெற்றிக்கண் எனப்படுவது. வான சாஸ்திரம், கணிதம் என்பவற்றைக் கொண்டே கிரகநிலை கணிக்கப்படும். எனவே இதில் நுட்பமான விஞ்ஞான அடிப்படை உண்டு. மாபெரும் விஞ்ஞான தத்துவ விசாரங்களை உள்ளடக்கியது. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு துறை.

தமிழர் இலக்கினம் சிங்கம். இலங்கையின் இலக்கினமாகிய கும்பத்திற்கு 7ஆம் இடம் சிங்கம். சட்ட பூர்வமான பங்காளிகளை 7ஆம் இடம் குறிக்கும். அனேகமானோர் 3ஆம் இடமாகிய மேடத்தை தமிழர் இலக்கினமாக கொள்வதுண்டு. அது தவறாகும். இரு பக்கமும் பயன்படுத்தக்கூடிய ஒரு மேலங்கியை உள்வளம் வெளிவளமாக மாற்றி அணிய முடியும், அது போலவே இங்கும். கும்பத்தின் 7ஆம் இடம் சிங்கம். சிங்கத்தின் 7ஆம் இடம் கும்பம். இங்கும் பங்காளர் பிரிந்துபோக வேண்டும்.

அப்படியில்லாவிடில் தமிழர் சுதந்திரத்தை, அடிப்படை உரிமைகளை, தனித்துவம் உள்ள ஒரு தேசிய இனமென்பதை, சமத்துவமாக நடத்தப்படுவதை (கல்வி, தொழில் வாய்ப்பு, மருத்துவ வசதி போன்றவற்றில்) அவர்கள் பாதுகாப்பை அங்கீகரித்து அவர்களே அவற்றை நிர்வகிக்கக் கூடியதாக வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்ட மாநில சுயாட்சி போன்ற

| | | | |
|---|---|---|---|
| 8 | சந் 13° 10' 9 | கே 13° 38' 10 | 11 |
| சனி 2° 01' (வக்) 7 | தமிழர் தாயகத்தின் 06 – 09 – 1993 அன்றைய கிரக நிலை காலை 5-30 | | சுக் 17° 29' 12 |
| 6 | | | சூ 19° 45' பு 26° 45' |
| 5 | ரா 13° 38' 4 | 3 | செ 22° 20' வி 12° 27' 2 |

ஒன்றை வழங்கச் சிங்களவர் தாமாக முன்வர வேண்டும்.

### இறுதிச் சமர்

4, 9இற்குரிய செவ்வாய் தமிழர் நிலப்பகுதியையும் குடியேற்றம், வெளியேற்றம் என்பவற்றையும் குறிக்கும். 5, 8இற்குரிய வியாழனுடன் சேர்வது சுதந்திர உணர்வையும் தாயகத்திற்கான போரையும், அனேகமாக இறுதிச் சமர் என்பதையும் குறிக்கும்.

2ஆம் இடமாகிய கன்னியில் சேர்வதுடன் 1, 12இற்குரிய சனியின் பார்வையை சந்திக்கிறது. இது மக்களின் ஒற்றுமையை குலைக்கும் சக்திகளின் தொழிற்பாட்டையும், சதி, உளவுவேலைகளில் ஈடுபடுவோரையும் அதிகரிக்கச் செய்யும் தன்மையுடையது. அதே நேரம் கேது 10இல் செவ்வாய், வியாழன் ஆகியவற்றால் பார்க்கப்படுவது தமிழர்களுக்கு அதிக பாதுகாப்பு வேண்டுமென்பதை காட்டுகிறது. இத்தகைய நிலை 11 – 09 – 1992இல் இருந்து 12 – 10 – 1993 வரை நீடிக்கும். மற்றும்படி தமிழர் பகுதியில் பொதுவாக அழிவுகளுண்டு.

### அரசு பணிய நேரிடும்

எப்படியிருப்பினும் சூரியன் 16 – 09 – 1993 வரை சிங்கத்தில் சஞ்சரிப்பது இலக்கினத்தை பலப்படுத்துவதுடன் வெற்றி வாய்ப்பையும் அதிகரிக்கும்; இத்தகைய நிலையில் 06-09-1993இல் செவ்வாய், வியாழன் ஒரே புள்ளியில் சந்திக்கின்றன. இது மிகுந்த தாக்கத்தை உண்டு பண்ணும். பின்னர் செவ்வாய் விலகும் காலமாகிய 17 – 09 – 1993 வரையான காலத்தில் தமிழர் மாபெரும் வரலாறுகள் படைக்கும் சாத்தியம் நிறைய உண்டு. அதிகமானவை கடலிலும் மற்றவை தரையிலும் வானிலும் நிகழும். வானிலும் வரலாறு படைக்க இடமுண்டு. செவ்வாய் கன்னியை விட்டு விலகும் வேளை இலங்கை அரசைப் பணிய வைக்கும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதன் இலக்கினமாகிய கும்பத்திற்கு 8இல் செவ்வாய் வியாழன் சேருவதும் அவற்றை 1, 12 இற்குரிய சனி பார்ப்பதும் தமிழர் பகுதியிலும் பார்க்க அங்கு பாரிய பொருளாதார, இராணுவ இழப்புகளை உண்டு பண்ணும். நிலைமை மோசமடைவதற்கு முன்னர் அது தீர்வை நோக்கி தானாக தள்ளப்படும்.

இந்தச் சந்தப்பர்த்தை வெளிநாடுகள் பயன் படுத்தி இலங்கையை கழுத்துப் பிடி பிடிக்கும் கிரக பலன் உண்டு. இதிலிருந்து அது தப்பமுடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

— சுழிபுரம் கே. பி. சர்மா —

## தெற்கில் அரசியல் தலைமைத்துவ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குழுவில் வண பீதா தலிப்பும் அங்கம் வகித்தார். என்பது நினைவு கூரத்தக்கது.

இனப்பிரச்சினை குறித்து அதிகம் தெரிந்து வைத்திருப்பதாலும், உணர்ச்சி பூர்வ மானவர்களாகவும் இராணுவ அதிகாரிகளே விளங்குவதால் அவர்களே இனப் பிரச்சினையைக் கையாள்வதிலும் முதலிடம் வகிக்கிறார்கள்; மேலோங்கி நிற்கிறார்கள் என்பது புலனாகிறது அல்லவா?

தாம் நினைப்பதைச் செய்ய முடியாமற் போகும் ஒரு சில சந்தர்ப்பங்களில் இராணுவ அதிகாரிகளுக்கு வரும் ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் அளவே இல்லை;

அரசியல்வாதிகள் தமது பதவியைக் காப்பாற்றுவதிலும் அதிகாரத்தை தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்துவதிலுமே அக்கறையாக இருக்கிறார்கள். இராணுவ அதிகாரிகள் தமது உயிரைக் கொடுத்துப் போராடுபவர்கள் என்பதனை மனதில் கொள்வதில்லை. அவர்கள் கூறும் புத்திமதிகளை, ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுவதாலேயே ஜெனரல் கொப்பேகடுவ போன்ற பெரும் வீரர்களை நாம் — நாடு, இழக்க நேரிடுகிறது — என்று கொப்பேகடுவவுடன் சேர்ந்து பல யுத்த களங்களில் போராடிய உயர் இராணுவ அதிகாரி ஒருவர் எழுதியிருந்தார். ஜெனரல் கொப்பேகடுவவுக்கு அஞ்சலி செலுத்தி எழுதிய கட்டுரை ஒன்றில் இராணுவ அதிகாரிகள் காணும் இடும் கட்டளையை அரசியல் தலைவர்கள் தலையால் ஏற்க வேண்டும் என்ற தொனியில் இந்தக் கருத்து அமைந்திருப்பதை நோக்கலாம்.

இவ்வாறு இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவம் தான் நினைத்ததையே செய்ய விரும்புகிறது. 1992 ஆம் ஆண்டு மார்ச் ஏப்ரலில் இருந்த நிலைமையில் இப்போது எவ்வித மாற்றமும் இல்லை. அது மேலும் வளர்ச்சி அடைந்திருப்பதையே காண முடிகிறது என்பது அவதானிகளின் கருத்து.

இயக்கப்படும் ஜனாதிபதி

பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் மாலுமி இல்லாத கப்பலாக ... அலைக்கேற்றாற் போல் அல்லுண்டு போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி விஜேதுங்கா தீர்க்கமான முடிவு எடுக்கக் கூடியவராக இல்லை. தனக்கென்று சில ஆலோசகர்களை வைத்திருக்கிறார். அவர்கள் கூறுவதை திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளையாகவே அவர் செயற்படுகிறார். இனப்பிரச்சினை போன்ற முக்கிய விடயங்களில் தனித்து முடிவு எடுத்து மற்றவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று செயற்படுத்தும் திறமை அவரிடம் இல்லையாம்!

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ரணில் விக்கிரமசிங்கா மூலம் ஆக வேண்டிய அலுவல்களைச் செய்துகொண்டு போகிறார். அதனைப் பற்றி அக்கறை இல்லாதவராக, போட்டு மேவும் தன்மையுடன் விஜேதுங்கா சமாளித்துக்கொண்டு பதவியைக் காப்பாற்றுகிறார் என்பது கொழும்பு அவதானிகளின் மதிப்பீடு.

மேலும் ஆளும் கட்சியான ஐக்கியதேசியக்கட்சி பலவீனம் அடைந்திருக்கிறது. உட்கட்சிப் பூசல்கள் பெருகி உள்ளன. காமினியை அரசில் சேர்த்து அமைச்சர் பதவி வழங்குவதை ரணில் எதிர்க்கிறார். அவருக்கு ஆதரவாகப் பலர் இருக்கிறார்கள். அதனால் ஐ. தே. க.—ஜ. ஐ. தே. மு. கூட்டு பிசுபிசுக்கும் நிலையாகிவிட்டது. உட்கட்சிப் பூசல்களை சமாளித்து கட்சியை வலிமையுள்ளதாக்கும் திறமை டி. பி.க்கு உண்டா என்று பலரும் சந்தேகப்படுகிறார்கள். ஐ. தே. கட்சி வெளிப்பார்வைக்கு பூச்சு அழகாகத் தெரிகிறது. உள்ளே வெடிப்புகள் பலப்பல. ஒரு சின்னத் தள்ளுத் தள்ளினால் பொலபொல வென்று விழுந்துவிடும்!

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அதைவிட மோசம். அம்மா – மகள் சண்டை இன்னும் தீர்ந்தபாடில்லை. எதிர்பார்க்கப்பட்டது போல அனுரா ஐ. தே. கட்சியுடன் இணைந்து கொள்ளும் வாய்ப்பும் நழுவிப் போய்விட்டது.

இவ்வாறாகத் தெற்கில் அரசியல் நிலை ஸ்திரமற்றதாக இருக்கிறது. இந்தச் ... தாக இருக்கிறது. அரசியல் தலைமைத்துவத்தில் பெரும் வரட்சி நிலை தோன்றியுள்ளது. இந்தச் சூழ் நிலையில் ... தான் முயற்சிக்கோ ... பிலை ... ந்தும் இராணுவத் தீர்வு வழி நடந்தால் தான் தேர்தல் வரையாவது காலம் ஓடும் என்று தெற்கு அரசியல் தலைவர்கள், குறிப்பாக அரசுத் தலைவர்கள் கருதுகிறார்கள். இதுகொழும்பில் விடயமறிந்த வட்டாரங்களின் கருத்து.

மேலும் இத்தகைய ஒரு சூழ்நிலையில் —

மேலோங்கிய நிலையில் நிற்கும் இராணுவத்தின் கோரிக்கைகளையோ யோசனைகளையோ ஏற்காது விடுவது தலையில் தன் கையால் மண் போடுவது போலாகும் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்களாம்! ஆம். தமக்குள் என்ன சண்டை இருந்தாலும் இராணுவச் சதி ஒன்றுக்கு இடமளிக்காதிருக்க வேண்டும் என்பதில் அவர்கள் உன்னா அக்கறையாக உள்ளார்களாம்.

அதனாலேயே இராணுவம் கேட்ட ஆறுமாத அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த வருடம் தேர்தல் வரும்வரை இப்படியே இழுத்தடித்து விடுவது அரசுக்கும் அதன் பதவிக் காலத்துக்கும் சாதகமாகவே இருக்கும் அல்லவா?

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் வைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இனப்பிரச்சினைக்கு அடுத்த வருடத்தில் தான் தீர்வு என்று கூறியதன் அர்த்தம் அதுவேயாகும்.

அடுத்த வருடத் தேர்தல் வரை இராணுவத்தை ஒரு மாதிரிச் சமாளிப்பதற்காக அதன் உயர் அதிகாரிகள் மட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே முரண்பாடான கருத்துடையவர்களை உயர் பதவிகளில் வைத்திருப்பது போல, அடுத்த மட்டத்திலும் எதிரும் புதிருமானவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு ஒருமுறை போய் வந்தால் இது பளிச் சென்று புலப்படும் என்கிறார் அனுபவம் உள்ள அன்பர் ஒருவர்!

ஆயர் கென்னத் முயற்சி

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணவேண்டும் என்பதில் அக்கறையுள்ள அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தமது முயற்சியை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைத்திருப்பதற்கும் தெற்கின் அரசியல் வரட்சியே காரணம் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. சமாதான முயற்சிகளுக்கான அடித்தள வேலைகளில் அவர் கொழும்பில் ஈடுபட்டிருந்தாலும், ஜனவரி மாதத்திலேயே அதில் தீவிரமாக ஈடுபட உத்தேசித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, எதிர்வரும் மாதங்களில் வடக்கு - கிழக்கில் அரச இராணுவத் தாக்குதல்களை தீவிரமாக்கி முடிக்கி விடும் என்ற படம் தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக வடக்கில் யுத்த நெருக்கடி அதிகரிக்கும். வழமைப் பிரசாரம் புலிகளை ஒடுக்குவதாகக் கூறித் தமிழ் மக்களை அழிக்கும் அலுவல் தீவிரமடையப் போகின்றது.

மனிதாபிமானம் என்பது சொற்பமும் இல்லாமல் தமிழர்களை வதைக்கவும் அதன் மூலம் அவர்களைப் பலவீனமாக்கவும் அரசு தனது சக்தியை எதிர்வரும் மாதங்களில் முழுமையாகப் பயன்படுத்திப் பரீட்சிக்கப் போகிறது!

இராணுவச் செலவுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட, 8,500 கோடி ரூபா போதாது என்று அரசாங்கச் செலவுக்கு ஒதுக்கிய பணத்திலிருந்தும் 10 சத வீதம் மேலதிகமாக வழங்கப்பட உள்ளது.

தமிழர்களைப் பலவீனமாக்கும் தனது இறுதிப் பரீட்சார்த்தமாகக் கருதி அரசு இம்முறை செயற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

எதுவானால் என்ன, தர்மம் தமிழர் பக்கம் தான் உள்ளது. அவர்கள் தமது உரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்கள். அடுத்தவன் சொத்தைக் கேட்கவில்லை! எந்த இடர்வரினும், இரண்டாம் தரப் பிரசைகளாக வாழ்வதற்குத் தயாரில்லை; விடுதலை கிடைக்கும் வரை, நாலடியார் கூறும் மானம் உள்ள புலியைப் போல மனோ வலிமையை இழக்காதிருக்க வேண்டும். அதுவே அவர்களின் இறுதி வெற்றிக்கு வழி கோலும்! ✶

## கானகம் அழியின் வளம் வரண்டு விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வரலாறு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாது. எனவே தீர்வுக்குரிய வழியில் வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சமஷ்டி அரசு போன்ற ஒன்றை முன் வைத்து பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடும். முடிவு நன்மையானதாக இருக்கும். 5-11-1993 இற்கு மேல்தான் நன்மையான காலம் அமைகிறது. 22-8-1993 ஆம் திகதிய உதயனில் வெளிவந்த கட்டுரையில் இலங்கை பற்றி விரிவாக எழுதப்பட்டிருந்தது.

**நோய்கள் பரவும் ஆபத்து**

வியாழன் 11-09-1992 இல் இருந்து 12-10-1993 வரை கன்னியிலிருப்பது, சனி பார்வை பெறுவது உணவு உற்பத்தியைக் குறைக்கும். எனவே போதிய மழை பெய்யாது நீடித்த வரட்சி ஏற்படும். பொருளாதாரத் தடை நீளும், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் போசாக்கின்மையால் வருந்துவார்கள். சிசு மரணம் அதிகரிக்கும். வாதநோய், புற்றுநோய், ஈரல் அழற்சி, மலேரியா போன்றவை அதிகரிக்கும்.

இடையில் செவ்வாய் 02-08-1993 இல் இருந்து 17-09-1993 வரை கன்னியிலிருப்பது நெருப்புக்காய்ச்சல், ஏற்புவலி, விபத்தினால் ஏற்படும் காயங்களிலிருந்து அதிகளவு இரத்த இழப்பு ஏற்படுதல் போன்றவற்றுடன் யுத்த பீதியையும் உண்டாக்கும் விமானக்குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல் கவிபர் தாக்குதல் போன்றவை இப்போதிருப்பது போலவே தொடரும். செவ்வாய் விலகியதும் நிலைமைதிருந்திவிடும்.

பார்வைகள் பற்றிய குறிப்பு: எல்லாக் கிரகங்களும் தாமிருக்கு மிடமிருந்து 3, 10, 5, 9, 4, 7, 8 ஆகிய இடங்களைப் பார்க்கின்றன. இவற்றில் கிரகத்திற்கு கிரகம் பார்வையின் பலம் வேறுபடுகின்றது. இந்த நிலையினால் காலத்துக்குக் காலம் உண்டாகும் விளைவுகள் தவிர்க்க முடியாதவை.

**வழிபாடு தேவை**

"திக்கற்றவனுக்கு தெய்வமே துணை" என்பது ஆன்றோர் வாக்கு. இன்று இந்நிலை சாதாரணம். எனவே வழிபாடு செய்வதே சிறந்தது.

தேவர்கள் அமிர்தம் கடைந்தபோது வெளிவந்த ஆலகால விடத்தை தானுண்டு தேவர்களைக் காத்த நீலகண்டன், பிட்டுக்கு மண் சுமந்து அடிபட்டவன், எங்களை எல்லாம் காக்கப் போராடும் கரங்களை வலுப்படுத்தி அவர்களுடன் தானும் ஒருவனாக மறைந்து நின்று ஏன் போராடமாட்டான்?

எங்கள் பாவங்களுக்காக சிலுவையைச் சுமந்த இயேசு இரட்சகன் எங்களை இரட்சிக்க மாட்டானா? எமது விடுதலையை வென்றெடுக்க, போரில் இறந்துபோன ஆத்மாக்கள் சாந்திபெற, போரினால் பாதிக்கப்பட்டோர் நலம் பெற, இங்கு சாந்தியும் சமாதானமும் மீண்டும் நிலவ, இறைவனை வணங்கி வழுத்துவோமாக! ★

## தீர்வு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

பாரிஸில் விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகரைச் தாம் சந்தித்தபோது இது பற்றி தம்மிடம் தெரிவிக்கப் பட்டதாகவும்—

இவ்விடயத்தில் தாம் நடுவராகச் செயற்படுவதற்கு புலிகள் பிரமுகர் இணக்கம் தெரிவித்தார் என்றும் தொண்டமான் மேலும் கூறினார்.

பாரிஸில் பேசப்பட்ட விடயங்களை அடுத்து, இது பற்றி பேசுவதற்காக ஜனாதிபதியையும், பிரதமரையும் இவ்வாரத்தில் சந்தித்துப் பேசியிருப்பதாக அவர் மேலும் சொன்னார். (உ-6)


"கற்கக் கசடற"

## மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்

- ஆண்டு — 4 (புலமைப்பரிசில் 1994)
- ஆண்டு — 5 (பாடசாலை அனுமதிப் பரீட்சை)
- 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம் ஆண்டு வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம், சுகாதாரம் ஆகிய பாடங்களுக்காக.

★ G.C.E. O/L
கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்குரிய மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்,

★ ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து முன்னணி கல்வி நிறுவனங்களிலும், புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்து எம்மிடம் சேர்ப்பித்தால் திருத்திக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு மாணவரையும் வினாக்களுக்கான தெளிவான சரியான உறுதியான விடையளிக்கப் பயிற்றுவதே இப்பயிற்சி வினாத்தாள்களின் இலக்கு

விபரங்கட்கு:

பதிவாளர்,

**BOND கல்வி நிறுவனம்**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(27195)


## மரண அறிவித்தல்

### திருமதி சசீந்திராதேவி விஜயகுமார்

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சசீந்திராதேவி விஜயகுமார் 31-8-93 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கல்முனையைச் சேர்ந்த க. விஜயகுமாரின் (குஞ்சன்) அன்பு மனைவியும், விநோத்தின் அருமைத் தாயாரும், நல்லதம்பி கமலாம்பிகை தம்பதிகளின் மகளும், கந்தையா தம்பதிகளின் மருமகளும், சந்திரா, வசந்திரா, சிறீதரன், பிரபாகரன், கிரிதரன், ரமணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணமூர்த்தி (ஆசிரியர் — கல்முனை), சந்திரசேகரம் (நில அளவையாளர் கிளிநொச்சி), பரிமளாதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04-09-93) கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சந்திரசேகரம்

இல 11, ஜெயராஜ் வீதி,
கோக்குவில்.

(27193)

# உலக விடுதலை இயக்கங்கள் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு

## லண்டன் கூட்டத்தில் பகிரங்க அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 5

உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற இரு விடுதலை இயக்கங்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

பிரிட்டனுக்கான எல்சல்வடோர் விடுதலை இயக்கப் பிரதிநிதியான கலாநிதி விக்டர் அமியான் தமது இயக்கத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

லண்டனின் ட்ரவல்கார் சதுக்கத்தில் 'கறுப்பு ஜூலை' நினைவாக தமிழர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட கலாநிதி விக்டர் அமியான் அங்கு பேசுகையில் தெரிவித்தாவது:-

தமிழ் மக்களின் போராட்டத்திற்கும், எமது போராட்டத்திற்கும் இடையே பல பொதுவான ஒற்றுமைகள் உள்ளன. உங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு எனது அமைப்பின் சார்பில் ஆதரவை வழங்குகிறேன். தமிழினத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். உங்கள் போராட்டம் வெற்றி பெறட்டும் — என்றார்.

துருக்கியின் குர்திஷ் தொழிலாளர் கழகமான பி. கே. கே. அமைப்பின் சார்பில் அதன் பிரதிநிதி திருமதி எல்ரெல்லா ஸ்மித் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் —

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் அருந்தியாகம், உலகில் உள்ள அனைத்து தேசிய விடுதலைப் போராளிகளுக்கும், தேச விடுதலைப் போராட்டங்களுக்கும் குறிப்பாக எமது குர்திஷ் விடுதலைப் போராட்டத்துக்கும் எழுச்சியூட்டுலதாக விளங்குகின்றது — என்று கூறினார்.

## ஆலயங்களில்

உச்சாய் அருள் மிகு கண்ணகை அம்பாள் கோயில் நவ உத்தர சகஸ்ர சங்காபிஷேகம் மற்றும் யாகமும், திருவூஞ்சலும், மகேஸ்வர பூசையும் நாளை திங்கட்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (த)

o o o

ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (க-17)

## இன்று

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும்.

o o o

வலி.மேற்கு பிரதேச சபை உப அலுவலக வட்டுக்கோட்டை சஜமுகன் சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 2 மணிக்கு இலுப்பையடி பொது விளையாட்டு மைதானத்தில் திருமதி சாந்தினி சிவநேசன் தலைமையில் நடைபெறும். (க-61)

o o o

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் ப. கண்ணதாசன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசா கலந்து கொள்வார் (க-17)

o o o

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் திருமுறை விழா ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் (த-30)

## போராளிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியில் பங்குபற்றிய கலைஞர்களுக்கும் அவர் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, வண. பிதா யோசேப் மைக்கல் அடிகள் ஆகியோர் வாழ்த்துரையும் —

இணுவில் சைவாசிரிய பிரம்மஸ்ரீ கி. வீரமணி ஐயர் மதிப்புரையும் நிகழ்த்தினர்.

முன்னதாக யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா, மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி. ஜெனா ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் வரவேற்புரையையும், நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

திரு. பொன். சுந்தரலிங்கத்தின் இசை அரங்கு நிகழ்வும் இடம்பெற்றது. (உ-111)


O/L

அனைத்துப் பாடங்களுக்குமான வினா - விடை வகுப்புகள்

ஆரம்பம்: 05—09—1993

BOND கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(27197)


## விளையாட்டு நிகழ்வுகள்

காந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை நடைபெறவுள்ளன.

★ விலகிச் சென்ற அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் சென். ஹென்றிஸியன் அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணி மோதும்.

★ வெற்றியடைந்த அணிகளுக்கிடையிலான போட்டியில் திருமலை நட்சத்திர அணியை எதிர்த்து ஞான முருகன் அணி மோதும்.

o o o

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி:- உரும்பராய் உதயசூரியன் அணி எதிர் ஆறுகால்மடம் அறிவொளி அணி.

★ 4-30 மணி:- அளவெட்டி விநாயகர் அணி எதிர் சுழிபுரம் சத்தியா அணி.

o o o

கன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்திய நாக்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணி முதல் மயிலணியில் நடைபெறும்.

சிறப்புப் பரிசுக்கான ஆட்டத்தில் உடுவில் செங்கதிர் வி. க. அணியை எதிர்த்து மல்வம் ஞானப்பிரகாசர் வி.க. அணி மோதும்.

இறுதியாட்டத்தில் கைதடி வளர்மதி வி. க. அணியை எதிர்த்து வடலியடைப்பு காந்திஜி வி. க. அணி மோதும். (உ-89)

## இலங்கை வென்றது

கொழும்பு, செப். 5

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்றிரவு கொழும்பில் முடிவுற்ற மூன்றாவது ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை அணி 44 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இலங்கை 198 ஓட்டங்களையும் தென்னாபிரிக்கா 154 ஓட்டங்களையும் பெற்றன.

இந்த ஆட்டத்தில் இலங்கை வென்றதை அடுத்து ஆட்டத் தொடர் 1-1 என்ற அடிப்படையில் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இந்த ஆட்டத் தொடரில் முதலாவது ஆட்டம் மழையால் குழம்பியது. இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றியீட்டியிருந்தது. (உ)

## கடற் பிராந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் முதல் திருகோணமலை வரையான கடற்பிரதேசம் நீண்ட பரந்த நீர்ப் பகுதியாகும்.

ஏற்கெனவே மட்டுப்படுத்தப்பட்ட வலுவுடன் இயங்கி வரும் ஸ்ரீலங்கா கடற்படையினால் இத்தகைய அகன்ற கடற்பரப்பில் மேற்படி சட்டத்தை முழுஅளவில் அமுல் செய்ய முடியுமா என்பது கேள்விக் குறியே.

ஆகவே சாதாரண மீனவர்கள் கூட அரசின் இந்தப்பிரகடனத்தை உதாசீனம் செய்துவிடுவார்கள்.

இது கடந்த இரண்டு வாரங்களில் புலிகளின் தாக்குதலில் பெரும் இழப்பை கடற்படை எதிர்நோக்கியதை அடுத்து அவசர அவசரமாக விடுக்கப்பட்ட ஓர் அறிவிப்பே தவிர வேறில்லை.

விடுதலைப் புலிகளின் கடற்படை—அதாவது கடற் புலிகள்—குறிப்பாக கடல் கரும்புலி தனது நடவடிக்கையை தற்போது தீவிரப்படுத்தியிருக்கிறார்கள் என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளே கூறியிருக்கிறார்கள்.

இந்நிலையில், அரசின் பிரகடனப்படி கடல் தடைச் சட்டத்தை அமுல் செய்வது என்பது கஷ்டமே—என்று தெரிவித்துள்ளார். (உ-5)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 5

அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் உள்ள காவலரணில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ரதீஸ் அல்லது மருதன் (தில்லைநாதன் சுதாகரன் — இரணை இலுப்பைக் குளம், வவுனியா) வீரச்சாவடைந்தார். (ஓ-5)

## வில்லூன்றி தீர்த்தம் துப்புரவு

யாழ்ப்பாணம், செப். 5

வில்லூன்றித் தீர்த்தம் இன்று இறைத்துத் துப்புரவு செய்யப்படுகிறது. தீர்த்தத்தில் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்யும் மக்களின் சுகாதாரத்தை பேணும் விதத்தில் அது மாதாந்தம் இறைத்துத் துப்புரவு செய்யப்படுவதாக பரிபாலன சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நான்கு மாதங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் தீர்த்தத்தில் நீராடி இருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## குழாய்க் கிணறு

சுழிபுரம், செப். 5

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க அனுசரணையில் ஆறாயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (க-25)

## வலி. மேற்குப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

இதற்கிடையில் —

நேற்று மாலை மண்கும்பான் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் சுழிபுரம் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர். ஷெல் குண்டுகள் வெடித்த சத்தம் யாழ். நகரப் பகுதிக்கும் கேட்டபடி இருந்தது.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய சுற்றாடல் பகுதியிலும் ஷெல்குண்டுகள் விழுந்து வெடித்தன. கன்னன் மடாலயம் ஷெல்லினால் சிறு சேதத்திற்கு உள்ளானது.

ஆலயத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்றுவரும் இவ்வேளையில் — பக்தர்கள் நின்றிருந்தபோதும் விபரீதம் ஏதும் நிகழவில்லை. தொடர்ந்தும் திருவிழா நடைபெற்றது. (ஓ-15-23-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 2… இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org